# பண்டாரவளை பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 14 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 26 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-----------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, பண்டாரவளை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையில் பேணப்படும் சொத்துப் பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 300,000 இற்கான மூன்று காணிகளின் பெறுமதி கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை அல்லாத சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கு மீதி ரூபா 300,000 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் அலுவலர்கள் / ஊழியர்கள் 06 பேரிடமிருந்து பணம் அறவீடு செய்யப்பட்டு வங்கிக் கணக்குகளில் முதலீடு செய்திருந்த ஊழியர் பிணை ரூபா 28,105 தொகை நிதிக் கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முதலீட்டு மீதி மற்றும் திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்கள் ரூபா 28,105 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 3,000,000 தொகையில் இருந்து மேற்கொள்வதற்கு எதிர்ப்பார்த்த நிர்மாண வேலைகளுக்காக கடன் கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் மற்றும் திசெம்பர் 31

திகதியில் உள்ளவாறு பொறுப்புக்கள் ரூபா 3,000,000 வீதம் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) புரநெகும செயற்திட்டத்திற்காக ஹீல்ஒய காணிப் பகுதிகள் ஒதுக்குவதற்காக மீளாய்வாண்டின் போது இலங்கை புகையிரத சேவையின் வாணிப அத்தியட்சகர் அலுவலகத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 109,760 தொகை தொடர்பாக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொறுப்புக்கள் மற்றும் ஆண்டிற்கான செலவுகள் ரூபா 109,760 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் போது, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் கிடைத்திருந்த 10 பல்கரும நடமாடும் கடைகளின் பெறுமதி ஆகிய ரூபா 265,000 இனை கணக்கீடு செய்யப்படாமையால், சொத்துக்கள் கணக்குகள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 265,000 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) 2014 ஆகஸ்ட் 05 திகதி ரூபா 220,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 06 டயர்கள் களஞ்சியத்தில் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிற்கான தொக்கில் உட்படுத்தியிருக்கவில்லை.

### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

சபையினால் சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 36,059,207 ஆகக் காணப்பட்டதுடன், செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 28,786,581 ஆகும்.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவுகள் 1:6 மற்றும் 4 | சபையில் கடமையாற்றிய, இடமாற்றம் பெற்றுள்ள மற்றும் சேவையை விட்டு சென்றுள்ள 05 அலுவலர்கள் / ஊழியர்களிடம் 1996 முதல் 2014 வரையான காலப்பகுதியில் அறவிடப்பட்ட வேண்டிய ரூபா 168,750 இற்கான பதவியணிக் கடனை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 571 | சபையின் வைப்புச் செய்து 02 வருடங்களை கடந்துள்ள ரூபா 204,958 பெறுமதியான திருப்பி செலுத்த வேண்டிய வைப்புப் பணத்தினை நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் உரிமையளிப்பு செய்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,916,499 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,833,282 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 5,083,217 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 நீர்க் கட்டணம்

----------------------

சபையினால் பராமரிக்கப்பட்டு நடாத்தப்படும் 06 நீர்த் திட்டங்களின் 125 நுகர்வோரிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 507,215 இற்கான நிலுவை நீர்க் கட்டணத்தை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

சபையினால் சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 உள்ளவாறு ரூபா 4,562,839 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 10,072,800 இற்கான முத்திரை கட்டண வருமான அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.3 தொடர்பாடல் டவர் கட்டணம்

-----------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்த தொடர்பாடல் டவர்களில் இருந்து வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்